Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556 நடுநிலை நாளிதழ் ISO : 9001:2015; QT-57977/1125

**செய்தியாளர்கள் தேவை**



தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை

☎ 94440 82959

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 104 | சனிக்கிழமை Saturday | 14.02.2026 | பக்கங்கள் Pages:4 | ₹6 | ஈரோடு Erode

# தமிழகத்தில் மகளிர் உரிமைத்தொகையின் கீழ் ரூ.5,000 பெண்களுக்கு வரவு

## முதலமைச்சர் ஸ்டாலின் நடவடிக்கைக்கு அரசியல் தலைவர்கள் வரவேற்பு



மகளிர் உரிமைத் தொகையாக ரூ. 5,000 வரவு வைக்கப்பட்டுள்ளதாக தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார். அரசியல் தலைவர்கள் வரவேற்று உள்ளனர் பிப்ரவரி மாதத்துக்கான ரூ. 1,000 பணத்துடன், மார்ச், ஏப்ரல் ஆகிய மாதங்களுக்கு முன்பணமாக ரூ. 2,000 மற்றும் கோடைக்கால சிறப்பு தொகுப்பாக ரூ. 2,000 என மொத்தம் ரூ. 5,000 வழங்கப்பட்டுள்ளது.

முதல்வர் ஸ்டாலின் வெளியிட்ட விடியோ தெரிவித்திருப்பதாவது:

அரசு சார்பில் 5 ஆயிரம் ரூபாய் உங்கள் கணக்கில் வந்திருக்கும். எதற்காக இந்தப் பணம்? நாங்கள் ஆட்சிப்பொறுப்பேற்றபோது கரோனா உச்சத்தில் இருந்தது. அதைச்சமாளித்து மக்களின் உயிரைக் காத்தது மட்டுமல்ல, அவர்கள் வாழ்வாதாரத்தைக் காக்க 4 ஆயிரம் ரூபாய் நிவாரணத் தொகையையும் வழங்கினோம்.

சென்ற ஆட்சி விட்டுவிட்டுப் போன கடுமையானநிதிநெருக்கடியைச் சமாளித்து, ஆட்சிக்கு வந்ததுமே பல திட்டங்களை நிறைவேற்றினோம். ஆட்சிக்கு வருவதற்கு முன்பு, மாதம் ஆயிரம் ரூபாய் உரிமைத்தொகை வழங்கப்படும் என்று அறிவித்தேன். அப்போது, "இது சாத்தியமே இல்லை" எனச் சிலர் சொன்னார்கள். ஆனாலும், நிதிநெருக்கடியைச் சமாளித்து, மத்திய அரசின் ஓரவஞ்சனையையும் மீறி, கடந்த 2023-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் "கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட"த்தை வெற்றிகரமாகச் செயல்படுத்திக் கொண்டு வருகிறோம். முதலில், ஒரு கோடியே 13 லட்சம் மகளிருக்குப் பயனளித்த இந்தத் திட்டம், அண்மையில் விரிவுபடுத்தப்பட்டு, தற்போது ஒரு கோடியே 31 லட்சம் குடும்பத் தலைவிகள் பயன்பெற்று வருகிறார்கள். இது வெறும் நிதியுதவி அல்ல.

சமூகத்தில் பெண்கள் ஆற்றும் பங்களிப்பை அங்கீகரிப்பதற்காகக் கொடுக்கப்படுகிற உரிமைத்தொகை! இந்தத் தொகையை வைத்து, அன்றாட வீட்டுச் செலவுகள், குடும்பத்தில் ஏற்படும் மருத்துவச் செலவுகள், குழந்தைகளுக்கான கல்விச் செலவுகள் என பல அத்தியாவசியச் செலவுகளை, மகளிர்தாங்களேநிறைவு செய்ய இந்த திட்டம் வழிவகுத்தது.

திமுக மீண்டும் ஆட்சிக்கு வந்தால் மகளிர் உரிமைத் தொகை ரூ. 2,000 ஆக உயர்த்தப்படும் என்று தமிழக முதல்வரும் திமுக தலைவருமான மு.க.ஸ்டாலின் வாக்குறுதி அளித்துள்ளார். மேலும், பிப்ரவரி மாதத்துக்கான மகளிர் உரிமைத் தொகை ரூ. 1,000, மார்ச் மற்றும் ஏப்ரல் மாதத்துக்கான தொகை ரூ. 2,000 மற்றும் கோடைக்கால சிறப்பு தொகுப்பாக ரூ. 2,000 என மொத்தம் ரூ. 5,000 மகளிர் உரிமைத் தொகை கணக்குகளில் வரவு வைக்கப்பட்டதாக முதல்வர் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக எக்ஸ் தளத்தில் விடியோ வெளியிட்டு முதல்வர் பதிவிட்டிருப்பதாவது:

"தமிழ்நாட்டு மகளிருக்கு இந்த ஸ்டாலின் தந்த உறுதிமொழிதான் உரிமைத்தொகை. யார் தடை ஏற்படுத்தினாலும் அதிலிருந்து பின்வாங்க மாட்டேன். தேர்தலைக் காரணம் காட்டி, மூன்று மாதங்களுக்கு உரிமைத்தொகையை முடக்கப் பார்க்கிறார்கள். முந்திக்கொண்டது நமது திராவிட மாடல் அரசு! பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதங்களுக்கான முன்பணமாக ரூ. 3 ஆயிரம் + கோடைக்காலச் சிறப்புத் தொகுப்பாக ரூ. 2 ஆயிரம்! 1.31 கோடி கலைஞர் மகளிர் உரிமைத்திட்டப்பயனாளிகளுக்கும் 5ஆயிரம் ரூபாய் வரவு வைக்கப்பட்டிருக்கிறது. வெல்லும் தமிழ்ப் பெண்கள் ஆதரவோடு அடுத்தும் நாங்கள்தான் வெல்வோம்! திராவிட மாடல் 2.0-இல் ஆயிரம் ரூபாய் உரிமைத்தொகையை 2 ஆயிரமாக உயர்த்தி வழங்குவோம்! இது, என் சகோதரிகளுக்கு இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் கொடுக்கும் வாக்குறுதி!" எனக் குறிப்பிட்டுள்ளார்.

# யார் தடை ஏற்படுத்தினாலும் அதிலிருந்து பின்வாங்க மாட்டேன்



## சேலத்தில் த.வெ.க. தலைவர் விஜய் பேச்சு

சேலத்தில் உள்ள 11 பேரவைத்தொகுதிகளில் அதிமுக தலைமையிலான கூட்டணிக் கட்சிகள் 10 தொகுதிகளை கைப்பற்றியிருக்கும் நிலையில், இன்று நடைபெற்ற நிர்வாகிகள் கூட்டத்தில் பேசிய தவெக தலைவர் விஜய், அதிமுக என்ற வார்த்தையைக் கூறாமல் அதிமுக பற்றி பேசியுள்ளார்.

சேலம் சீலநாயக்கன்பட்டி, கேவிபி கார்டன் உள்வளாகத்தில் இன்று, தவெக தலைவர் விஜய்யின் நிர்வாகிகள் சந்திப்பு, தேர்தல் பிரசாரக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டம் பல்வேறு நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாட்டுடன் நடைபெற்று முடிந்துள்ளது. ஐந்து ஆயிரத்துக்கும் குறைவானவர்களே கூட்டத்துக்குள் அனுமதிக்கப்பட்டனர்.

கூட்டத்தில் தவெக தலைவர் விஜய் பேசுகையில், களமே சொல்கிறது, இரண்டு கட்சிகளுக்கு இடையேதான் போட்டிஎன்று. ஒன்று, தவெக, இன்னொன்று திமுக. தூய சக்திக்கும், தீய சக்திக்கும் இடையே தான் போட்டி.

இனி நேரடியாக தேர்தல் பற்றி பேசுவோம், விஜய் என்ன இவர்களைப் பற்றி பேசுகிறார், இவர்களைப் பற்றி பேசுவதில்லை என்கிறார்கள். இது யாருக்கான தேர்தல். பேரவைக்கான தேர்தல். இங்கு யார் ஆட்சியில் இருக்கிறார்கள். பொய்வாக்குறுதிகளைக் கொடுத்து மக்கள் விரோத ஆட்சி நடத்துபவர்கள். அவர்களை ஆட்சியில் இருந்து அகற்ற வேண்டும். அவர்களை அகற்ற வேண்டும் என்றால், நாம் யாரை எதிர்க்க வேண்டும்?

ஏற்கனவே மக்கள் பல முறை நீக்கியவர்களை நாம் ஏன் எதிர்க்க வேண்டும். நம்முடைய கவனம், இலக்கு, திமுக என்றபோது, இருட்டுக்குக்குள் ஏன் கல் எறிய வேண்டும்?

மக்களை விரும்பும் விஜய் வேண்டுமா? மக்கள் விரோத ஆட்சி நடத்தும் ஸ்டாலின் வேண்டுமா? அவ்வளவுதான் இந்த தேர்தல். இதற்கு நடுவில் வேறு யாருமே கிடையாது என்று விஜய் பேசியுள்ளார். உங்களுக்காக நீதி கேட்கவே நான் அரசியலுக்கு வந்தேன். ஆனால் இப்போது நான் உங்களிடம் நீதி கேட்டு வந்துள்ளேன். இந்த விஜய் என்ன தவறு செய்தான்? தன்னை நேசித்த மக்களுக்காக எல்லாவற்றையும் ஒதுக்கி தள்ளிவிட்டு அரசியலுக்கு வந்தது தப்பா? மற்றகட்சிகளுக்கு நிகழ்ச்சிகள் நடத்த அனுமதியும், இடமும் கொடுக்கிறார்கள். ஆனால், நமக்கு மட்டும் இடம் கொடுக்க மாட்டேன் என்கிறார்கள். மக்களை சந்திக்க எனக்கு இடம் கொடுக்காமல் இருப்பது என்ன நியாயம்?

நமது ஜென்ஸீ தலைமுறையினருக்கு நான் சொல்ல விரும்புகிறேன். பணத்தை கொடுத்து ஏமாற்றினால், ஏமாறுவீர்களா? எங்கள் ஓட்டு எங்கள் உரிமை, எங்கள் ஓட்டு விசில் சின்னத்துக்குத் தான். வேறு யாரையும் நம்பி ஏமாற மாட்டோம் என அனைவரும் சொல்லுங்கள். இது உங்களுக்கு கேட்டுச்சா ஸ்டாலின் சார்? இனி நீங்கள் கொள்ளை அடித்து வைத்துள்ள பணம் எல்லாம், குப்பையில்தான் தூக்கி போடணும். உங்கள் ஊழல் ஆட்சியையும் மக்கள் குப்பையில்தான் தூக்கிப்போட போகிறார்கள்.

எனது குட்டி நண்பா, நண்பிகள் உங்கள் அம்மா, அப்பா மற்றும் குடும்பத்தினரை விசில் சின்னத்துக்கு ஓட்டு போட சொல்லுங்கள். நாங்கள் அரசியலுக்கு வந்தது யாரையும் ஒழிக்கவோ, அழிக்கவோ வரவில்லை. யார் மீதும் தனிப்பட்ட வெறுப்போ, வன்மமோ கிடையாது. வெறுப்பு அரசியல் செய்ய அரசியலுக்கு வரவில்லை. அரசியல் ரீதியாக நமது எதிரி யார் என சொல்லிவிட்டு, தேர்தலில் வென்று மக்களுக்கு நன்றிக்கடன் செலுத்த அரசியலுக்கு வந்துள்ளோம்.

எங்களை ஏ டீம், பி டீம் எனச் சொல்கின்றனர். எங்களுக்கு அனுபவம் இல்லை என சொல்கிறார்கள். மக்கள் பணத்தை கொள்ளையடித்ததை தாண்டி பெரிய அனுபவம் இவர்களுக்கு இருக்கிறதா? அடுத்தவர்கள் ஆரம்பித்த கட்சியில், அடுத்தவரின் முகவரியில் அரசியல்வாதியாக இருக்கும் இவர்களுக்கு ஒரு சவால். என்னைப்போல சொந்தமாக ஒரு கட்சி ஆரம்பித்து ஒரு சதவீதம் வாக்கு வாங்கிக் காட்ட திராணி இருக்கிறதா?

கூட்டணியை நம்பியுள்ள 75 மற்றும் 50 ஆண்டு பழமையான கட்சிகளை மீறி, களத்தில் தனியாக நின்று இன்று 30 சதவீத ஆதரவை பெற்றுள்ள எங்களுக்கு அனுபவம் இல்லையா? கட்சியை ஆரம்பித்த அண்ணா, எம்ஜிஆர், ஜெயலலிதாவை மறந்தது,

இவர்கள் சொன்னது எல்லாவற்றையும் மறந்ததுதான் இவர்களின் அனுபவம். கொள்ளையடிப்பதில் எங்களுக்கு அனுபவம் இல்லை0 தமிழ்நாடு எப்போதும் டெல்லிக்கு அவுட் ஆஃப் கன்ட்ரோல் என ஸ்டாலின் சார் சொல்வார். அவர் எதில் அவுட் ஆஃப் கன்ட்ரோல் என நான் சொல்லட்டுமா? சட்டம் – ஒழுங்கு, பெண்கள் பாதுகாப்பு, வேலைவாய்ப்பு எல்லாம் அவுட் ஆஃப் கன்ட்ரோல். மக்கள் மகிழ்ச்சியாக இருப்பதாக ஸ்டாலின் சொல்கிறார். மக்கள் மகிழ்ச்சியாக இருந்தால், விவசாயிகள், தூய்மைப் பணியாளர்கள், அரசு ஊழியர்கள், மாற்றுத் திறனாளிகள் என அனைவரும் போராடுவது ஏன்? ஆட்சியில் எல்லாமே பிரச்சினையாக உள்ளது. ஆட்சிக்கு வரும்போதுதான் பொய் பேசினீர்கள், ஆட்சியை விட்டு போகும்போதும் ஏன் பொய் பேசுகிறீர்கள்?

பொய்யிலே பிறந்து பொய்யிலே வளர்ந்த புளுகர் பெருமானே. தமிழகத்தில் பெண்கள் பாதுகாப்பு இருப்பதாக சொல்கிறார். அப்படியானால் அண்ணா பல்கலைக்கழக மாணவி, கோவை மாணவி சம்பவங்கள் எப்படி நடந்தது? சட்டம் – ஒழுங்கை பராமரிக்க தமிழகத்துக்கு ஒரு டிஜிபி வேண்டும். அவர் எங்கே போனார். ஆக்டிங் அதிகாரிகளை வைத்து ஆட்சி நடத்தினால் ஆட்சி இப்படித்தான் சிரிப்பாய் சிரிக்கும்.

நாம் ஆட்சிக்கு வந்தால், மக்களின் அடிப்படை பிரச்சினைகளை தீர்ப்பேன். ஒரு தெளிவான தேர்தல் அறிக்கை விரைவில் வரும். ஆட்சிக்கு வரவேண்டும் என்பதற்காக நடைமுறைக்கு சாத்தியமில்லாத வாக்குறுதிகளை நான் கொடுக்கமாட்டேன். ஆட்சிக்கு வந்தப் பின்னர் மக்களுக்கு நல்லது செய்ய எந்த எல்லைக்கும் சென்று போராடுவேன். இப்போது திமுகவுக்கும், தவெகவுக்கும் தான் போட்டி.

# முதலமைச்சர் ஸ்டாலினுக்கு தோல்வி பயம்; வாக்குக்காக உரிமைத்தொகையை முன்பணமாகக் கொடுக்கிறார்

## அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி பேச்சு



திருப்பத்தூர் மாவட்டம், ஆம்பூரில் செய்தியாளர்களைச் சந்தித்தார் அ.தி.மு.க பொதுச்செயலாளரும் முன்னாள் முதலமைச்சருமான எடப்பாடி பழனிசாமி. அப்போது அவர் பேசியதாவது, ₹₹ ₹சட்டமன்றத் தேர்தலைக் காரணம் காட்டி, உரிமைத் தொகையை நிறுத்திவிடுவார்கள்' என்று ஸ்டாலின் குறிப்பிட்டிருப்பது வடிகட்டிய பொய். ஏற்கெனவே 2024 நாடாளுமன்றத் தேர்தல் நேரத்தில் உரிமைத் தொகை வழங்கப்பட்டபோது, இப்போது மட்டும் எப்படி நிறுத்த முடியும்? தோல்வி பயம் காரணமாக, அதாவது ₹வரும் சட்டமன்ற பொதுத்தேர்தலில் தோற்றுவிடுவோம்' என்ற காரணத்தினால், ஸ்டாலின் இந்த அறிவிப்பை வெளியிட்டிருக்கிறார். அதுவும், குடும்பத் தலைவிக்கு பிப்ரவரி மாத உரிமைத்தொகை தானாக கிடைக்கும். மார்ச், ஏப்ரல் மாதங்களிலும் உரிமைத்தொகை கிடைத்து விடும். இருந்தாலும், இந்த மூன்று மாதத் தொகையையும் முன்பணமாகக் கொடுத்து, அதோடு கோடைக்கால சிறப்புத் தொகுப்பு ஒன்றையும்கொடுத்து அவர்களின் வாக்குகளைப் பெறுவதற்காக இப்படிப்பட்ட ஒரு நாடகத்தை அரங்கேற்றியிருக்கிறார் ஸ்டாலின். இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகம் மக்களின் செல்வாக்கை இழந்துவிட்டது. இதற்கு முன்பு 2022, 2023, 2024,2025 ஆம் ஆண்டுகளிலும் கோடைக்காலம் வந்தது. ஆனால், தேர்தல் நடக்கின்ற 2026 ஆம் ஆண்டில் மட்டும் ஸ்டாலினுக்குக் கோடைக்காலம் எப்படிக் கண்ணுக்குத் தெரிந்தது? இது முழுக்க முழுக்கத் தேர்தலை மையமாகக் கொண்டு அறிவிக்கப்பட்டது. உரிமைத் தொகைப் குடும்பத் தலைவிகள் படுகின்ற கஷ்டத்தைப் பார்த்து கொடுக்கவில்லை. 2021 சட்டமன்ற பொதுத்தேர்தலின்போது, தி.மு.க சார்பாக ஸ்டாலின் வெளியிட்ட தேர்தல் அறிக்கையில், ₹திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி பொறுப்பேற்றவுடன் குடும்பத் தலைவிகளுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகை வழங்கப்படும்' என்றஅறிவிப்பைவெளியிட்டார். ஆனால், 27 மாதகாலம் அந்த உரிமைத் தொகை வழங்கப்படவில்லை. பிரதான எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் நானும், எங்களுடைய சட்டமன்ற உறுப்பினர்களும் தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வலியுறுத்திய பிறகே 28-வது மாதத்தில்தான் உரிமைத் தொகைகொடுக்கஆரம்பித்தார். அப்போதெல்லாம், அந்தப் பெண்கள் பாதிக்கப்படமாட்டார்களா? நாங்கள் இரண்டு கட்டமாக கொடுத்திருக்கின்ற தேர்தல் அறிவிப்புகளைப் பார்த்து பயந்துதான் ஸ்டாலின் இப்போது விசித்தரமான அறிவிப்புகளையும் வெளியிட்டிருக்கிறார்'' என்றார் எடப்பாடி பழனிசாமி.

**செய்திகள்**

**உடனுக்குடன் படிக்க**

**தினத்தளம்**

DHINATH DHALAM

**வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்**

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

## ஈசா யோகா மையத்தில் தியானம் என்ற பெயரில் நடைபெறக்கூடிய உளவியல் மாற்ற நடைமுறைகள் குறித்து நீதி விசாரணை நடந்து வரும் நிலையில், அவற்றை விசாரிக்க உத்தரவிட்ட நீதிமன்றத்திற்கு நன்றி கூறிய பேரசியர் காமராஜ்

கோவை உப்பிலிபாளையம்பகுதியில் உள்ள பத்திரிகையாளர் மன்றத்தில் செய்தியாளர்களை சந்தித்து பேசிய,




ஓய்வு பெற்ற வேளாண்மை பேராசிரியர் டாக்டர் காமராஜ் கூறியதாவது

கடந்த 15 ஆண்டுகளுக்கும் மேலாக, எனது மகள்களான, கீதா, மற்றும் லதா ஆகிய இருவரும் ஈசாயோகாமையத்தில் தங்கி இருப்பது தொடர்பாகவும், ஈஷா அறக்கட்டளையில் நடைபெறும் மர்மங்கள் குறித்தும்,நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து அதன், விசாரணை நடைபெற்று வருகின்றது, வழக்கு தொடர்பான விசாரணையை நீதிமன்றம் ஏற்றுக்கொண்ட, நீதிமன்றம், கீதா மற்றும் லதா ஆகிய இருவரும் நன்கு கல்வி கற்றவர்கள் என்பதை ஏற்றுக் கொண்டு,அதேவேளையில் அவர்கள் பல ஆண்டுகளாக ஈஷா அறக்கட்டளையிலேயே வசித்து வருவதால் அந்த நிறுவனத்தின் செல்வாக்கை முற்றிலும் நிராகரிக்க முடியாதுஎனவும்அவர்கள், ஒரு சுதந்திரமான சூழலுக்கு கொண்டுவரப்பட்டு சில காலம் கவனிக்க பட்டால் அவர்களது கருத்துக்கள் மாற வாய்ப்பு உள்ளது என்றும் தெரிவித்துள்ளனர். மேலும் எனது மகள்கள் இருவரும் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்ட போது,பெற்ற தந்தையான என்னை, மரியாதை இன்றி ஒருமையில் பேசியது, நீண்ட காலமாக ஒரு மூடப்பட்ட சூழலில் வாழ்ந்து வந்ததன் விளைவை நான் காண்பதாகவும் காமராஜ் தெரிவித்தார்.

மேலும் உச்சநீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட கோவை மாவட்ட காவல் கண்காணிப்பாளரின் அறிவுரைப்படி கடந்த 15 ஆண்டுகளில் ஈஷா யோகா மையம் தொடர்பாகபலசந்தேகமரணங்கள் மற்றும் காணாமல் போனவர்களின் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது எனவும்,விசாரணை குழுவில் இடம் பெற்றுள்ள விசாரணை அதிகாரிகள், அடங்கிய குழுவில் இடம் பெற்றுள்ள மனநல மருத்துவர்கள், ஈசா யோகா மையத்தில் உள்ள சில நபர்களிடம், மனநிலை மாற்றங்கள் காணப்படுவதாகவும், கூடுதல் கால கண்காணிப்பு தேவை என்றும் தெரிவித்துள்ளனர் என தெரிவித்தார், குழந்தைகளுக்கு தொழில் முறை, மனநிலை ஆலோசனை வழங்கப்பட்டால், நிர்வாக தரப்பில் ஆலோசனை முறைகள் வழங்கப்படும், மாவட்ட குழந்தைகள் நலத்துறை அதிகாரிகள் கவனத்திற்கு நீதிமன்றம் இதனை எடுத்துரைப்பதாகவும் தெரிவித்துள்ளார் எனவே ஈஷா யோகா மையத்திற்கு, எதிராக தொடரப்பட்ட வழக்கு விசாரணை தனக்கு சாதகமாக வந்துள்ளதாகவும், விரைவில், ஈஷா மீதான மர்மங்களும் வெளிவரும் என்று திட்டவட்டமாக நம்புவதாக அவர் தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



## 5 நாள் வேலைத் திட்டத்தை சீர்குலைப்பதாகக் குற்றச்சாட்டு நல்லூரில் அ.தி.மு.க. சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்

கடலூர் மாவட்டம் நல்லூர் கடைவீதியில் தமிழகத்தில் கிராமப்புற மக்களின் வாழ்வாதாரமாக விளங்கும் 125 நாள் வேலை உறுதித் திட்டத்தைச் சீர்குலைக்க முயலும் திமுக அரசைக் கண்டித்து, கடலூர் மேற்கு மாவட்டம், நல்லூர் ஒன்றிய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் 13/02/2026 வெள்ளிக்கிழமைமாபெரும்கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு, நல்லூர் வடக்கு ஒன்றிய கழகச் செயலாளரும் முன்னாள் ஆவின் மாவட்டத் தலைவருமான பச்சமுத்து, நல்லூர் மேற்கு ஒன்றியச் செயலாளர் பொன்னேரி முத்து ஆகியோர் தலைமை தாங்கினர். ஏழை எளிய மக்களின் வேலைவாய்ப்பை உறுதி செய்யும் திட்டங்களில் முட்டுக்கட்டை போடும் தமிழக அரசின் போக்கைக் கண்டித்து, ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற நூற்றுக்கணக்கான கழகத் தொண்டர்களும் பொதுமக்களும் விண்ணதிரக் கண்டன முழக்கங்களை எழுப்பினர்.

இந்த நிகழ்வில் அ.தி.மு.க.மற்றும்கூட்டணி கட்சிகளைச் சேர்ந்த ஒன்றியத் தலைவர்கள், செயலாளர்கள்,மாவட்ட நிர்வாகிகள் உள்ளிட்டோர் பெருந்திரளாகக் கலந்து கொண்டு தங்கள் எதிர்ப்பைப் பதிவு செய்தனர். மக்களின் அடிப்படை உரிமைகளையும் வேலைவாய்ப்பையும் பறிக்கும் செயல்களில் ஈடுபடும் அரசுக்கு பொதுமக்கள் தகுந்த பாடம் புகட்டுவார்கள் என நிர்வாகிகள் தெரிவித்தனர். போராட்டத்தையொட்டி நல்லூர் கடைவீதி பகுதியில் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

## மதுராந்தகத்தில் ஒன்றிய அரசை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்

### மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியினர் பங்கேற்பு

மதுராந்தகம், பிப்.14 காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், மதுராந்தகம் சட்டமன்ற தொகுதி



மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகள் சார்பில் ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டை வஞ்சித்த பாஜக மற்றும் துணை போகும் அதிமுகவை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் மதுராந்தகம் தேரடி தெருவில் நடைபெற்றது

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்எல்ஏ தலைமை தாங்கினார். நகர்மன்ற தலைவர் மலர்விழி குமார் அனைவரையும் வரவேற்றார். இந்த கூட்டத்தில் மதச்சார்பற்றகூட்டணி கட்சிகளின். மாநில மாவட்ட நிர்வாகி கள் கலந்து கொண்டுமோடி அரசுக்கு எதிராக கண்டன கோஷங்களை எழுப்பினர். அப்போது, க.சுந்தர் எம்எல்ஏ பேசுகையில், பாரத பிரதமர் மோடி தமிழ் நாட்டை வஞ்சித்து வருகிறார். மகாத்மா காந்தி பெயரில் இருந்த 100 நாள் வேலை கிட்டத்தை நிறுக்க பார்க்கிறார்

ஏழைகளின் வயிற்றில் அடிக்க பார்க்கிறார்.

இதற்கெல்லாம்இங்கே உள்ள அதிமுக ஒத்து ஊதுகிறது, டெல்லிக்கு அஞ்சுகிறது. தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டிய ரூ.3,500 கோடி நிதியை வழங்கமறுக்கிறது.ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டிற்கு வழங்கியது முட்டை மட்டுமே. தமிழ் நாட்டில் வரியை பெற்றுக் கொண்டு பிரதமர் மோடி அல்வா கொடுக்கிறார். 'தமிழ்நாடு தலை குனியாது. ஸ்டாலின் தொடரட்டும். தமிழ்நாடு வெல்லட்டும்' இவ்வாறு பேசினார்.

இந்நிகழ்ச்சியில் நகர செய லாளர் குமார், மாவட்டத் துணைச்செயலாளர் ஓ.எஸ். தினகரன், ஒன்றிய செயலாளர்கள் கண்ணன், தம்பு. கோகுலக்கண்ணன், சத்திய சாய், சிவக்குமார். பேரூர் செயலாளர்கள் எழிலரசன்.எ சுந்தரமூர்த்தி, பேரூராட்சி தலைவர் தசரதன், நகர மன்ற துணைத் தலைவர் சிவலிங்

சும் மாணவரணி, துணை அமைப்பாளர் சரனா தன சேகரன், அவைத்தலைவர் சசிகுமார், அவைத்தலைவர். விசிக கட்சி நிர்வாகிகள் அன்புச்செல்வன், ஆதவன், தமிழினி , பேரறிவாளன், கலைக்கதிரவன், எடிசன், கிட்டு பிரபாகரன் , முகிலன், கதிர்வாணன், பன்னீர்செல்வம் , தயாநிதி , மலை சமத்துவன், உள்ளிட்ட. விசிக கட்சியினர் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.மற்றும் இந்த ஆர்ப்பாட்டத்தில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் மாவட்ட,ஒன்றிய,பேரூர். நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்


## ஈசா யோகா மையத்தில் வரும் 15ம் தேதி நடைபெற உள்ள மஹாசிவராத்திரி நிகழ்ச்சியில் மத்திய பாதுகாப்பு துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் பங்கேற்க உள்ளதாக ஈசா யோகா மையத்தினர் தெரிவித்துள்ளனர்

கோவை உப்பிலிபாளையம் பகுதியில் உள்ள பத்திரிக்கையாளர் மன்றத்தில் செய்தியாளர்களை சந்தித்து பேசிய ஈசா யோகா மைய தன்னார்வலர்களான, ரவீந்திரன், மற்றும் சரவணன் கூறியதாவது.. ஈசா யோகா மையத்தில் மகா சிவராத்திரி விழா கொண்டாட்டங்கள் வரும் பிப்ரவரி 15ஆம் தேதி




நடைபெற உள்ளது. இதில் மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் சிறப்பு விருந்தினராக பங்கேற்க உள்ளதாகவும், ஆன்மீக மரபில் மாசி மாசத்தில் வரும் சிவராத்திரி நாள் மகா சிவராத்திரி திருநாளாக கொண்டாடப்படுகின்றது. இந்த நாளில் கோள்களின் அமைப்பு, இயற்கையாகவே மனிதர்களின் உயிர்சக்தி, மேல் நோக்கி எழுவதற்கு உதவும் வகையில் உள்ளது. இந்த ஆன்மீக சாத்தியத்தை மக்கள் முழுமையாக பயன்படுத்திக் கொள்ளும் நோக்கில், நமது கலாச்சாரத்தில் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக மகா சிவராத்திரி நாளில் இரவு முழுவதும் விழிப்புணர்வுடன் விழித்து, இருக்கும் வகையில் கொண்டாட்டங்கள் நடைபெறுவது வழக்கம். அதன் ஒரு பகுதியாக ஈஷா யோகா மையத்தில் 32 வது மகாசிவராத்திரி கொண்டாட்டம் வரும் 15ஆம் தேதி நடைபெற உள்ளது எனவும், 15ஆம் தேதி மாலை 6 மணிக்கு தொடங்கி மறுநாள் காலை 6 மணி வரை இந்த கொண்டாட்டம் நடைபெறும் எனவும், இந்த நாளில் ஆதியோகி முன்பு சத்குருவுடன் நடைபெறும் நிகழ்ச்சிகள், சக்தி வாய்ந்த தியானங்கள், மந்திர உற்ச்சாடனைகள், யோகேஸ்வர லிங்கமஹா அபிஷேகம், மற்றும் தலைசிறந்த கலைஞர்களின் இசைநிகழ்ச்சிகள் உட்படபல்வேறுசிறப்புஅம்சங்கள் இடம் பெறுவதாக தெரிவித்தனர். இந்த ஆண்டு மகா சிவராத்திரி அன்று முதன்முறையாக சத்குரு, ஆதியோகி முன்பு பிரதிஷ்டை செய்யப்பட்டு இருக்கும் யோகேஸ்வர லிங்கத்திற்கு மகா அபிஷேகம் எனும் ஆன்மீக செயல்முறை நடைபெறுவதாகவும் தெரிவித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## பாகிஸ்தானில் அடுத்தடுத்து நிலநடுக்கம்



பாகிஸ்தானில் அடுத்தடுத்து நிலநடுக்கம் உணரப்பட்டதால் பரபரப்பு நிலவியது.

பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தில் வெள்ளிக்கிழமை காலை 6:30மணிக்குநிலநடுக்கம் ஏற்பட்டது.பூமிக்கடியில்13கிமீஆழத்தில்நிலநடுக்கம் உணரப்பட்டது.

மேலும நிலநடுக்கத்தின் மையப்பகுதி மாகாணத்தின் குஸ்தார் நகரத்திலிருந்து வடகிழக்கே 86 கிமீ தொலைவில் இருந்தது என்று பாகிஸ்தான் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

முன்னதாக காலை 5.52 மணிக்கு குஸ்தாருக்கு தென்கிழக்கே 75 கிமீ தொலைவில் 33 கிமீ ஆழத்தில் 3.8 ரிக்டர் அளவிலான மற்றொரு நிலநடுக்கம் ஏற்பட்டது.

பலுசிஸ்தானில் உள்ள ஜால் மாக்சி, ஜாஃபராபாத் மற்றும் நசிராபாத் ஆகிய பகுதிகளிலும் சிந்து மாகாணத்தின் பல மாவட்டங்களிலும் இந்த நிலநடுக்கமானது உணரப்பட்டது.

பாகிஸ்தானில் தொ டர்ந்து நிலநடுக்கங்கள் ஏற்படுகின்றன. 2005 ஆம் ஆண்டு ஏற்பட்ட நிலநடுக்கத்துக்கு 74,000 க்கும் மேற்பட்டோர் பலியாகினர் என்பது குறிப்பிடத்த க்கது.

### இந்திய அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு அமைச்சகம் மை பாரத் கேந்திரா

## ஈரோடு மாவட்டம் சார்பாக இளையோர் தலைமைத்துவ பண்புகள் பயிற்சி முகாம்

ஈரோடு மாநகர் ரங்கம்பாளையத்தில் உள்ள டாக்டர். ஆர்.ஏ.என். எம் கலை





அறிவியல் கல்லூரியில் 9.2.2026 முதல் 11.2.2026 வரை மூன்று நாட்கள் நடைபெற்றன. இதில் முதல் நாள் தொடக்க விழாவில் கீர்த்தனாவரவேற்புரை ஆற்றினார். தலைமை இயக்குனர் டாக்டர். பழனியப்பன் முன்னிலை அரசு தரப்பு வழக்கறிஞர் திருமலை மற்றும் முன்னாள் அரசு தரப்பு வழக்கறிஞர் ராஜா,முதல்வர் நளினி மற்றும் நந்தா கலை மற்றும்அறிவியல்கல்லூரியில் உடற்கல்வி இயக்குனர், தேவகாந்தன் மற்றும் ஹார்ட்புல்நெஸ் இன்ஸ்டிடியூட் ஈரோடு DLO மகாதேவன்,கலந்து கொண்டு துவக்கி வைத்தனர். இரண்டாம் நாள் கருப்பண்ணன் மாரியப்பன் கல்லூரியின் உடற்கல்வி இயக்குனர்டாக்டர் பிரபு, கீதாஞ்சலி, சமூக சேவகர்கள் மாயவன் வெங்கடேஷ் மற்றும் பேபி, நிதி ஆலோசகர் குருராஜன். சாய் ராஜ் கல்வி அறக்கட்டளை வரதராஜன், பவி ஹெல்த்லைஃப்பவுண்டேசன் கோபாலகிருஷ்ணன் கலந்து கொண்டனர்.மூன்றாம் நாள்பயிற்சிமுகாமிற்கு வருகை தந்த அரசு தரப்பு வழக்கறிஞர் பரணிதரன் , ஈரோடு சட்டக் கல்லூரி முதல்வர் முனைவர் அகபர் அலி பெய்க், தினத்தளம் தினசரி நடுநிலை நாளிதழ் ஈரோடு மாவட்ட நிருபர் ம. கோபாலகிருஷ்ணன் , ரகுநாத்

நிர்வாக இயக்குநர் கான்ஃபுட் ஆட்டோமோட்டிவ் பிரைவேட் லிமிடெட் மனோகரன் செயல்தலைவர் DSREV மொபிலிட்டி,. சுரேஷ் எஸ்.எஸ். சூர்யா கிராபிக்ஸ், மணிகண்டன் விஜயம் வில் விளையாட்டு பயிற்சி பள்ளி கலந்துகொண்டு சிறப்பித்தனர். மேலும் பயிற்சி முகாம் சிறப்பாக செயல்பட்ட 40 மாணவர்களுக்கு

சான்றிதழ்கள் நினைவு பரிசுகள் வழங்கி கௌரவித்தனர். இம்மூன்று நாள் பயிற்சி முகாமில் இளையோர்களுக்கு தலைமைத்துவ பண்புகள், தியானம், மாதிரி பாராளுமன்றம் ஆகிய பல்வேறு நிகழ்வுகள் நடத்தப்பட்டன.

## ஈரோட்டில் தேர்தல் வாக்குறுதியில் விசைத்தறி கோரிக்கைகள்: அமைச்சர் மூர்த்தியிடம் விசைத்தறி சங்கங்களின் கூட்டமைப்பு மனு

ஈரோடு: ஈரோட்டில் உள்ள ராயல் ரெசிடென்சி ஹோட்டலில், தமிழக வீட்டு வசதித் துறை அமைச்சர் சு.முத்துசாமி தலைமையில் மாவட்ட அளவிலான தொழில் அமைப்புகளின் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. வரும் தேர்தல் வாக்குறுதியில் தொழில் அமைப்புகளின் கோரிக்கைகளை இடம்பெறச்செய்யும்நோக்கில் நடைபெற்ற இக்கூட்டத்தில், தமிழ்நாடு விசைத்தறி சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் விசைத்தறி நலனுக்கான முக்கிய கோரிக்கைகள் அடங்கிய மனு அளிக்கப்பட்டது. குறிப்பாக, ஜிஎஸ்டி தாக்கலின் போதுதற்பொழுதுநடைமுறையில் உள்ள ஐடிசி-4 படிவத்தைப் பதிவு செய்வதில் உள்ள சிக்கல்கள் குறித்து அமைச்சரிடம்விரிவாகஎடுத்துரைக்கப்பட்டது. நூல் கொள்முதல் செய்யப்பட்டு அது சைசிங் செய்யப்படுவது, எத்தனை மீட்டர் ஒட்டப்பட்டது,தறி குடோன்களுக்குஅனுப்பப்பட்ட பாவு மீட்டர் அளவு, அங்கு உற்பத்தியான துணியின் அளவு, விற்பனை செய்யப்பட்ட மற்றும் இருப்பு வைக்கப்பட்டுள்ள துணி விவரங்கள் என ஒவ்வொரு செயல்பாட்டையும் தனித்தனியாகப் பதிவேற்றம்செய்யச்சொல்வதுவிசைத்தறித்தொழிலாளர்களுக்குப் பெரும் சுமையாக மாறியுள்ளது. குடிசைத் தொழிலாகவும்,சிறு குறு தொழிலாகவும் இத்தொழிலைச் செய்து வரும் தங்களுக்கு, இவ்வளவு நுணுக்கமான விபரங்களைப் பதிவேற்றம் செய்வது என்பது சாத்தியமற்ற ஒன்று என்றும், இந்த நடை-





முறை தொடர்ந்தால் தொழில் செய்ய முடியாத சூழல் உருவாகும் என்றும் கூட்டமைப்பின் நிர்வாகிகள் அமைச்சரிடம் விளக்கினர்.இந்தக் கோரிக்கைகளை கனிவுடன் கேட்டறிந்தஅமைச்சர், இது தொடர்பாக நேரில் விரிவான விளக்கம் பெற்று கொண்டு, தீர்வு காண வழி வகுப்பதாக விசைத்தறி சங்க நிர்வாகிகளிடம் தெரிவித்ததாககூறப்படுகிறது.

# ஈரோட்டில் தேசிய அளவிலான பேட்மிண்டன் போட்டிகள்




இந்திய மற்றும் தமிழ்நாடு இறகு பந்து சங்கம் மற்றும் ஈரோடு மாவட்ட இறகு பந்து சங்கங்களின் சார்பில் "S.K.M Egg Pro 2026" என்கிற தலைப்பில் தேசிய அளவிலான மூன்று நாட்கள் கொண்ட பேட்மிண்டன் போட்டிகள் இனிதே தொடங்கியது.

ஈரோடு நீல்கிரிஸ் பேட்மிண்டன் அகாடமியில் நடைபெறும் இப்போட்டியின் தொடக்க நிகழ்ச்சிக்கு ஈரோடு மாவட்ட இறகுபந்து சங்க தலைவர் திரு.எம்.செல்லையன் என்கிற ராஜா தலைமை தாங்கி போட்டியினை துவக்கி வைத்தார். மேலும், ஈரோடு மாநகராட்சி ஆணையர் திரு. ஆர்பித் ஜெயின் அவர்கள் சிறப்பு விருந்தினராகவும், தமிழ்நாடு இறகு பந்து சங்கத்தின் பொது செயலாளர் திரு. வி.இ. அருணாசலம் அவர்கள் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொண்டார்கள். இவர்களுடன் எஸ். கே.எம். புராடக்ட் நிறுவனத்தின் தலைவர் திரு. எஸ். கே. எம். ஸ்ரீசிவக்குமார் மற்றும் ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் செயலர் திரு. எஸ். நுந்தகுமார் பிரதீப் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.

இப்போட்டியின் துவக்க நிகழ்வில் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்துக் கொண்ட இந்திய அணியின் முன்னாள் வீரர் திரு. ஜே.பி. எஸ் வித்யாதார் மற்றும் திரு. சனாவா தாமஸ் ஆகியோருக்கு ஈரோடு மாவட்ட இறகு பந்து சங்கத் துணைத்தலைவர் திரு. கார்த்திக்கேயன் அவர்கள் தனது வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

நாக் அவுட் முறையில் ஆண்கள் இரட்டையர் பிரிவு, கலப்பு இரட்டைகள் பிரிவு என இரண்டு பிரிவுகளின் கீழ் நடைபெறும்.

இந்த போட்டிகளில் தமிழ்நாடு. கர்நாடகா, கேரளா, ஆந்திரா, தெலுங்கானா புதுச்சேரி, மத்திய பிரதேசம் உள்பட பல்வேறு மாநிலங்களை சேர்ந்த 92 அணிகளை சேர்ந்த வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டார்கள்.

பரிசளிப்பு விழா

ஞாயிற்றுக்கிழமை அன்று நடைபெறும் பரிசளிப்பு விழாவில் முக்கிய பிரமுகர்களான அக்னி ஸ்டீல்ஸ் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குனர் திரு. எம். சின்னசாமி, தமிழ்நாடு இறகு பந்து சங்கத்தின் பொது செயலாளர் திரு. இ.வி. அருணாசலம், ஈரோடு மாவட்ட இறகு பந்து சங்கத்தின் பொது செயலாளர் திரு. எஸ். சுரேந்தர் மற்றும் முன்னாள் பொது செயலாளர் திரு. ஆர்.ஜி. சுந்திரம் ஆகியோர் கலந்து கொண்டு வெற்றி பெற்ற வீரர், வீராங்கனைகளுக்கு பரிசுகள் வழங்க இருக்கின்றார்கள். மேலும், ஆண்கள் இரட்டையர் பிரிவில் முதல் இடம் பிடிக்கும் அணிக்கு ரூ.1 லட்சத்து 20 ஆயிரமும், 2-ம் இடம் பிடிக்கும் அணிக்கு

ரூ.80ஆயிரமும்,பெண்கள் இரட்டைகள் பிரிவில் முதலிடம் பிடிக்கும் அணிக்கு ரூ.70 ஆயிரமும்.2-ம்இடம்பிடிக்கும் அணிக்குரூ.50ஆயிரமும் பரிசாக வழங்கப்படுகிறது. மொத்தம் ரூ.7 லட்சம் மதிப்பில் வீரர்கள், வீராங்கனைகளுக்கு பரிசுகள் வழங்கப்பட உள்ளன.

தொடக்க நிகழ்ச்சியில் நீல்கிரீஸ் பேட்மிண்டன் சங்கத்தின் உறுப்பினர்கள், இறகுபந்து விளையாட்டு வீரர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டு வீரர்களை உற்சாகப்படுத்தி வருகிறார்கள்.

# ஈரோடு தெற்கு மாவட்டம் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சார்பில் பா.ஜ.க. அரசை கண்டித்து ஆர்ப்பாட்டம்



ஈரோடு தெற்கு மாவட்டம் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சார்பில் ஒன்றிய பாஜக அரசை கண்டித்தும் அதற்கு துணைபோகும் அதிமுகவின் நிலைப்பாட்டை எதிர்த்தும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம். மொடக்குறிச்சி சட்டமன்றத் தொகுதி கொடுமுடி ஒன்றியத்திற்குட்பட்ட சிவகிரியில் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் தமிழகவாழ்வுரிமை கட்சியின் சார்பில் கலந்து கொண்டுவிவசாயிகளை படு குழியில் தள்ள நினைத்து அமெரிக்காவுடன் ஒப்பந்தம் செய்தும் தொழிலாளர்களின் வாழ்வுரிமையை நசுக்க துடித்துக் கொண்டிருக்கும் மற்றும் தொடர்ந்து தமிழகத்தை வஞ்சிக்க நினைக்கும் ஒன்றிய அரசை கண்டித்து. மாபெரும் எழுச்சி மிக்க போராட்டத்தில் மொடக்குறிச்சி தொகுதி செயலாளர் ஆலயம் ரா கார்த்திகேயன் தொகுதி தலைவர் JK @DR.M.ஜெயகாந்தன் விவசாய அணி செயலாளர் பழனிச்சாமி மாவட்ட இளைஞரணி செயலாளர் வடிவேல் மாணவர் அணி செயலாளர் மணிகண்டன் சிவகிரி பேரூர் செயலாளர் சம்பத் தலைவர் மற்றும் கொல்லன் கோயில் பேரூராட்சியின் பொருளாளர் சோமசுந்தரம் வடுகபட்டி பேரூர்பொருளாள.ர் அருள்குமார் மற்றும் நிர்வாகிகளுடன் கலந்து கொண்டு போராட்டத்தை வெற்றி அடையச் செய்தோம்.

# மதுராந்தகத்தில் அதிமுக தேர்தல் அறிக்கை துண்டு பிரசுரம் வினியோகம்

## சட்டமன்ற உறுப்பினர் மரகதம் குமரவேல் தீவிர வாக்கு சேகரிப்பு



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகத்தில் உள்ள பொதுமக்களை நேரில் சந்தித்து அதிமுகவின் தேர்தல் அறிக்கை அடங்கிய துண்டு பிரசுரங்களை பொதுமக்களுக்கு வழங்கும் நிகழ்ச்சியை மதுராந்தகம் நகர கழக செயலாளர் பூக்கடை கே.சி.சரவணன், மதுராந்தகம் நகர அம்மா பேரவை செயலாளர் வழக்கறிஞர் எம். பி .சீனிவாசன், ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில் , மதுராந்தகம் அதிமுக சட்டமன்ற உறுப்பினர் மரகதம் குமரவேல், அவர்கள் கலந்து கொண்டு மதுராந்தகம் நகரில் உள்ள வார்டுகளில் வீடு வீடாக மற்றும் கடை வீதிகளில் சென்று பொதுமக்களை நேரில் சந்தித்து அதிமுக தேர்தல் அறிக்கையை பொதுமக்களிடையே எடுத்துக் கூறி எதிர்வரும் சட்டமன்றத் தேர்தலில் அதிமுக அமோக வெற்றி பெற செய்ய வேண்டி பொதுமக்களுக்கு தேர்தல் அறிக்கை கொண்ட துண்டு பிரசுரம் வழங்கி இரட்டை இலை சின்னத்திற்கு வாக்களிக்குமாறு தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர். இந்த நிகழ்ச்சியில் அதிமுக நிர்வாகிகள் நகர கழக துணைச் செயலாளர் முத்து, மாவட்ட தகவல் தொழில்நுட்பு துணைச் செயலாளர் கார்த்திக் சுந்தரம், மாவட்ட பிரதிநிதி சித்தப்பாகிருஷ்ணன்,வார்டு உறுப்பினர் பன்னீர், மகளீர் அணி நிர்வாகி பரிமளா, உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# ஊத்தங்கரை பாம்பாறு அணையில் இருந்து பாசனத்திற்கு நீர் திறப்பு



கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை அருகே உள்ளபாம்பாறு அணையிலிருந்து ஆயக்கட்டு பாசனப் பகுதிகளுக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டது. பாம்பாறு நீர்த்தேக்கம் 1983-ம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டு ள்ளது.பாம்பாறுநீர்த்தேக்கத்தின் முழு நீர்மட்ட உயரம் 19.68அடி.இதன் முழு கொள்ளளவு 280 மி.க.அடி ஆகும். பாம்பாறு நீர்த்தேக்கத்திலிருந்து 2025 – 2026 ஆண்டு (பசலி 1435) ஆயக்கட்டு பாசன பகுதிகளுக்கு பாசனத்திற்காக 13.02.2026 முதல் 120 நாட்களுக்கு அரசு ஆணையின்படி தண்ணீர் திறந்து விடப்படுகிறது. இதன் மூலம் கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டத்தில் 12 கிராமங்கள் மூலம் 2501 ஏக்கரும் தருமபுரி மாவட்டம், அரூர் வட்டத்தில் 4 கிராமங்கள் மூலம் 1499 ஏக்கரும் மொத்தம் 16 கிராமங்கள் 4000 ஏக்கர் நிலங்கள் பாசனவசதி பெருகின்றது. முதல் மண்டலத்திற்கு 0 கி.மீ 11.725 கி.மீ. மற்றும் பிரிவுகால்வாய் மூலம் 2501 ஏக்கரும், இரண்டாவது மண்டலத்திற்கு 11.725 கி.மீ 31.500 கி.மீ. வரை பிரதானகால்வாய் மூலம் 1499 ஏக்கரும் மொத்தம் 4000 ஏக்கர் நிலங்கள் பயனடையும். விவசாய பெருமக்கள் நீர்வளத்து றையினருடன் ஒத்துழைத்து நீரினை சிக்கனமாக பயன்படுத்தி அதிக விளைச்சல் பெறும் நோக்கத்துடன் செயல்பட மாவட்ட நிர்வாகத்தின் சார்பாகவும், நீர்வளத்துறை சார்பாகவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.பயன்பெறும் கிராமங்கள் ஊத்தங்கரை வட்டத்தில் மிட்டப்பள்ளி ஒபகாவலசை போத்தராஜன்பட்டி மூன்ற ம்பட்டி கொட்டுகாரம்பட்டி

கரியபெருமாள் வலசை புளியம்பட்டி எட்டிப்பட்டி பாவக்கல்நல்லவம்பட்டி நடுப்பட்டி குப்பநத்தம் அரூர் வட்டத்தில் தா.அம்மாப்பேட்டை வேடக்கட்டமடுவு மேல்செங்கம்பாடி ஆண்டியூர் மாவட்ட வருவாய் அலுவலர் சாதனைகுறள், மதியழகன் எம் எல் ஏ, வட்டாட்சியர் ராஜலட்சுமி, மண்டலதுணை வட்டாட்சியர் நாகேந்திரன் ஒன்றிய செயலாளர் குமரேசன், எக்கூர் செல்வம் மிட்டப்பள்ளி ஊராட்சி மன்ற தலைவர் சின்னத்தாய் காந்தி பார்த்திபன் நீர்வளத்துறை செயற்பொறியாளர் செந்தில்குமார் அரூர் உதவி செயற்பொறியாளர் பார்த்திபன் உதவி பொறியாளர் பிரபு மற்றும் அதிகாரிகள் உள்ளனர்.

# சித்தாமூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு

# தேசிய ஜனநாயக கூட்டனியினர் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்



செங்கல்பட்டு மாவட்டம் செய்யூர் அருகே உள்ள சித்தாமூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு மக்கள் நலனின் அக்கறை கொள்ளாத விடியா தி. மு.க அரசை கண்டித்து தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் சித்தாமூர் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் பூபதி, சித்தாமூர் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் கொளத்தூர் ரவி, இடைக்கழி நாடு பேரூர் கழக செயலாளர் ஆறுமுகம், மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் ஏற்பாட்டில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கண்டன உரையாற்ற உலகை எம்ஜிஆர்மன்றஇணைச் செயலாளர் நாவலூர் முத்து கலந்து கொண்டு இந்த விடியா திமுக அரசை கண்டித்து கிராமப்புறங்களில் நடைபெறும் தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தில் கிராமப்புற மக்கள் வேலை செய்து வருகின்றனர் அந்தத் திட்டத்தை 125 நாட்கள் வேலை திட்டமாக மத்திய அரசு அறிவித்தது இந்த திட்டத்தை இந்த வேலை திட்டத்தை சீரழிக்கும் வகையில் செயல்பட்டு வரும் விடியா திமுக அரசை கண்டித்து கண்டன கோசங்கள் எழுப்பப்பட்டது. முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்

பூவேராகவமூர்த்தி பாஜக தெற்கு மாவட்ட தலைவர் பிரவீன் குமார் பாஜக தெற்கு மாவட்ட துணை தலைவர் சுந்தரவேல்ஹோட்டல் இளைஞர் மற்றும் இளம் பெண் பாசறை செயலாளர் பேரம்பாக்கம் அன்பு, மாவட்ட வர்த்தக அணி செயலாளர் பிரகாஷ் மாவட்ட அண்ணா தொழிற்சங்க செயலாளர் வினோத் பாட்டாளி மக்கள் கட்சியின் மாவட்ட செயலாளர் கணபதி காஞ்சிபுரம் மண்டல தகவல் தொழில்நுட்பச் செயலாளர் ராஜசேகர் மாவட்ட இலக்கிய அணி செயலாளர் குணசேகரன் பொதுமக்கள் பதாகைகள் ஏந்தி இந்த விடியா திமுக அரசுக்கு எதிர்ப்பு தெரிவித்தனர் இந்த ஆர்ப்பாட்டத்தில் தேசிய ஜனநாயக கூட்டணி நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# ஈரோடு மாநகர் மாவட்டம் கோட்டை ஈஸ்வரன் கோயில் பகுதியில் அ.தி.மு.க. தேர்தல் வாக்குறுதிகள் துண்டுபிரசுரம் வழங்கப்பட்டது



தமிழக சட்டமன்றத் தேர்தல் 2026-ஐ முன்னிட்டு,அதிமுகபொதுச்செயலாளர் எடப்பாடி கே.பழனிசாமி அறிவித்துள்ள தொலைநோக்குத் திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்க்கும் பணியில் அக்கட்சியினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். இதன் ஒரு பகுதியாக, ஈரோடு மாநகர் மாவட்டம் கோட்டை ஈஸ்வரன் கோயில் பகுதியில் அதிமுக அம்மா பேரவை சார்பில் பிரம்மாண்ட துண்டுப்பிரசுர வினியோக நிகழ்ச்சி நடைபெற்றது. கழக அம்மா பேரவை மாநிலத் துணைச் செயலாளர் S.வீரக்குமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், "மக்களைக் காப்போம், தமிழகத்தை மீட்போம்" என்ற முழக்கத்துடன் எடப்பாடியாரின் வாக்குறுதிகள் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டன. ஈஸ்வரன்கோவில்வீதி,பிருந்தா வீதி பகுதிகளில் வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் இந்தத் திட்டங்கள் மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தின.

குறிப்பாக, குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ. 2,000 உதவித்தொகை, ஆண்டுக்கு 3 இலவச கேஸ் சிலிண்டர்கள், 5 லட்சம் மகளிருக்கு ரூ. 25,000 மானியத்துடன் அம்மா இருசக்கர வாகனம் ஆகிய அறிவிப்புகள் பெண்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றன. மேலும், 100 நாள் வேலைத் திட்டத்தை 150 நாட்களாக உயர்த்துதல், அனைவருக்கும் கட்டணமில்லா பேருந்து வசதி, மாணவர்களின் கல்விக் கடன்களை அரசே ஏற்கும் அறிவிப்பு, முதியோர் உதவித்தொகை ரூ. 2,000-ஆக உயர்வு, ஜல்லிக்கட்டு வீரர்களுக்கு ரூ. 10 லட்சம் நிதியுதவி மற்றும் வீடற்ற ஏழைகளுக்கு "அம்மா இல்லம்" வழங்கும் திட்டம் உள்ளிட்ட பல்வேறு மக்கள் நலத் திட்டங்களை வீரக்குமார் விளக்கி உரையாற்றினார். இந்த எழுச்சிமிகு நிகழ்வில் அதிமுக அம்மா பேரவை நிர்வாகிகள் மற்றும் கழகத் தொண்டர்கள் பெருந்திரளாகக் கலந்துகொண்டு பொதுமக்களிடையே தேர்தல் வாக்குறுதிகளைக் கொண்டு சேர்த்தனர். எடப்பாடியாரின் தலைமையில் தமிழகம் மீண்டும் பொற்கால ஆட்சியை நோக்கித் திரும்ப மக்கள் உறுதிபூண்டுள்ளதை இந்த நிகழ்வின் வெற்றி பறைசாற்றுவதாக நிர்வாகிகள் நெகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.

# தேவகோட்டை சேர்மன் மாணிக்கவாசகம் நடுநிலைப் பள்ளியில் மன ஒருமைப் படுத்துதல் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு நடைபெற்றது




தேவகோட்டை - சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை சேர்மன் மாணிக்கவாசகம் நடுநிலைப் பள்ளியில் மன ஒருமைப் படுத்துதல் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு நடைபெற்றது. ஆசிரியை முத்துலட்சுமி வரவேற்றார். பள்ளி தலைமையாசிரியர் லெ. சொக்கலிங்கம் தலைமை தாங்கினார். தேவகோட்டை முத்தமிழ் வேத திருசபையின் துணைசெயலர்கள் ஆதி ரெத்தினம் மற்றும் மகாலிங்க மூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர் . அவர்கள் பேசுகையில்,. அறநெறிப் பாடல்களை மனமுவந்து படிக்க வேண்டும் அவ்வாறு படிக்கும்போது மனம் ஒருமை ஏற்படும். அதனை வீடுகளில் சென்றுதொடர்ந்துகூறினால் நமக்கு மிகப்பெரிய வெற்றிகள் கிடைக்கும். எனவே மாணவர்கள் சிறு வயதில் அறநெறிப் பாடல்களை நன்றாக படிக்க வேண்டும். இவ்வாறு பேசினார்கள். நிறைவாக ஆசிரியர் ஸ்ரீதர் நன்றி கூறினார்.



கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனையில் புதியதாக அதிநவீன வசதிகளுடன் கூடிய கூடுதல் மருத்துவ கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டது இந்த நிலையில் அவசர சிகிச்சை பிரிவு புதிய கட்டிடத்தில் இயங்கும் வகையில் மாற்றப்பட்டது இந்த நிலையில் அவசர சிகிச்சை பிரிவில் புதிய கட்டிடத்தை உளுந்தூர்பேட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மணிகண்ணன், நகர மன்ற தலைவர் திருநாவுக்கரசு துணைத்தலைவர் வைத்தியநாதன் ஒன்றிய குழு தலைவர் ராஜவேல் மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் டேனியல்ராஜ் ஆகியோர் இன்று வெள்ளிக்கிழமை மதியம் நேரில் சென்று பார்வையிட்டு புதிய அவசரத்திற்கு பிரிவில் பொருத்தப்பட்டுள்ள நவீன கருவிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்ததோடு அங்கு சிகிச்சை பெற்ற நோயாளிகளிடம் சிகிச்சை பெறும் முறைகள் குறித்தும் கேட்டிருந்தனர் இந்த ஆய்வின் போது தலைமை மருத்துவ அலுவலர் அன்புமணி மற்றும் மருத்துவர்கள் செவிலியர்கள் மக்கள் பிரதிநிதிகள் கலந்து உள்ளனர்.

# தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஈரோடு மாவட்டம் அரச்சலூர் ஓடாநிலையில்

# புதிதாக அமைக்கப்பட்டுள்ள விடுதலைப்போராட்ட மாவீரர் தீரன் சின்னமலை நினைவரங்கத்தில் குதிரை மேல் அமர்ந்தவாறு உள்ள திருவுருவச் சிலையை காணொளி காட்சி வாயிலாக திறந்து வைத்தார்





தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று (13.02.2026) அரச்சலூர் ஓடாநிலையில் உள்ள தீரன் சின்னமலை மணிமண்டப வளாகத்தில் ரூ.1 கோடி மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள விடுதலைப் போராட்ட மாவீரர் தீரன் சின்னமலை அவர்களின் நினைவரங்கத்தில் குதிரை மேல் அமர்ந்தவாறு உள்ள திருவுருவச் சிலையினை காணொளி காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

விடுதலைப் போராட்ட மாவீரர் தீரன் சின்னமலை அவர்கள் பட்டக்காரர் பரம்பரையில் மேலப்பாளையத்தில் 1756-ல் பிறந்தார். அவரது இயற்பெயர் தீர்த்தகிரி. இவர் சிலம்பப்பயிற்சி, தடிவீச்சு, வால்வீச்சு போன்ற பல வீர பயிற்சிகளையும் கற்றுதேர்ந்தவர்.கொங்கு நாட்டு வரிப்பணத்தை எடுத்துச் சென்ற அன்னியரிடம் சென்னிமலைக்கும் சிவன்மலைக்கும் இடையில் ஒரு சின்னமலை எடுத்துக் கொண்டான் என்று சொல் எனக் கூறி "சின்னமலை" எனப் பெயர் பெற்றார். வெள்ளையரைஎதிர்த்து வீரப்போர் புரிந்ததற்காக மக்களால் "தீரன்" எனப் போற்றப்பட்டார். 1805 ஏப்ரல் மாதம் சமையல்காரரால் காட்டிக் கொடுக்கப்பட்டு வெள்ளையரால் தீரன் சின்னமலை கைது செய்யப்பட்டு சங்ககிரிக் கோட்டையில் சிறை வைக்கப்பட்டார். 1805 ஆடிப் பதினெட்டு அன்று தீரன் சின்னமலை அவரது சகோதரர் இருவரும் தளபதி கருப்ப சேர்வையும் சின்னமலைக்கு அடைக்கலம் கொடுத்த விருப்பாச்சி பாளையக்காரர் குப்பண்ண நாயக்கரும் சங்ககிரிக் கோட்டையில் தூக்கிலிடப்பட்டார்கள்.

தாய்மொழியாம்தமிழ் மொழியை வளர்த்திட தமிழறிஞர்களையும், தமிழகத்தை உயர்த்திடத் தம் ஆயுளையே அர்ப்பணித்த பெருமக்களையும், இந்தியத்திருநாட்டின் விடுதலைக்குப் பாடுபட்டுத் தம் இன்னுயிரைஈந்ததியாகச்செம்மல்களையும் நினைவு கூர்ந்து அவர்கள் ஆற்றிய நாட்டுத் தொண்டினை இளைய தலைமுறையினர் அறிந்து கொள்ளும் வகையில், தமிழ்நாடு அரசின் மூலம் மணிமண்டபங்கள் அமைத்தும், சிலைகள் நிறுவியும் அவர்களுக்கு பெருமை சேர்க்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில், ஈரோடு மாவட்டம் அரச்சலூர், ஓடாநிலையில் விடுதலைப் போராட்ட வீரர் தியாகி தீரன் சின்னமலை அவர்களுக்கு திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம் அமைக்கப்பட்டு, தமிழ்நாடு சார்பில் ஆண்டுதோறும் ஆடி 18 அன்று விடுதலைப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை ஆடிப்பெருக்கு விழா அரசுவிழாவாக கொண்டாடப்பட்டு வருகிறது. மேலும் அன்னாரின் பிறந்த நாளான ஏப்ரல் 17-ம் தேதி ஆண்டு தோறும் அரசு விழா கொண்டாப்பட்டு வருகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஈரோடு மாவட்டத்திற்கு வருகை தந்த போது, அரச்சலூர் ஓடாநிலையில் விடுதலைப் போராட்ட மாவீரர் தீரன்சின்னமலைஅவர்களின் நினைவரங்கத்தில் குதிரை மேல் அமர்ந்தவாறு உள்ள திருவுருவச் சிலையை அமைக்கும் பணிக்கு 26.11.2025 அன்று அடிக்கல் நாட்டி வைத்தார்.

அதனைத்தொடர்ந்து நேற்றைய தினம் தமிழ்நாடு முதலமைச்சர் , காணொளிக் காட்சி வாயிலாக பணிகள் நிறைவடைந்து மணிமண்டப வளாகத்தில் தீரன் சின்னமலை ரூ.1 கோடி மதிப்பீட்டில் புதிதாககட்டப்பட்டு குதிரையின் மேல் அமர்ந்துள்ளபடி உள்ள வெண்கலச்சிலையினை திறந்து வைத்தார். விடுதலைப் போராட்ட வீரர் தீரன்சின்னமலைஅவர்களின் திருவுருவச் சிலைக்கு மரியாதை செலுத்தும் வகையில், அரசின் சார்பில், ஒவ்வொரு அமைப்பினரும் தங்களது புகழ் வணக்கத்தைதீரன் சின்னமலை அவர்களுக்கு செலுத்திக் கொண்டிருக்கின்றார்கள். தொடர்ந்து, ஈரோடு மாவட்டம் அரச்சலூர் ஓடாநிலையில் அமைந்துள்ளதீரன் சின்னமலை மணிமண்டபத்தில் தமிழ்நாடு அரசின் சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்ச்சிகளின் போது, வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி, மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர்.ப.செல்வராஜ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி. சந்திரகுமார், அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாசலம், மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் சி. சரஸ்வதி, திருச்செங்கோடு சட்டமன்ற உறுப்பினர் ஈ.ஆர். ஈஸ்வரன், ஈரோடு மாநகராட்சி மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், துணைமேயர் வே.செல்வராஜ், மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார், ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் சிந்துஜா, அரச்சலூர் பேரூராட்சித்தலைவர் விஜய குமார், உட்பட சுதந்திர போராட்ட வீரர் தீரன் சின்னமலை அவர்களின் வாரிசுதாரர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# சேலம் விஜய் கூட்டத்தில் உடல்நிலை பாதிப்பால் ஒருவர் உயிரிழப்பு: தவெக விளக்கம்



சென்னை: சேலத்தில் தவெக தலைவர் விஜய்யின் பரப்புரைக்கூட்டத்தில் பங்கேற்ற ஒருவர் உடல்நல பாதிப்பால் உயிரிழந்தார். இது குறித்து தவெக விளக்கம் அளித்துள்ளது.

சேலம் மாவட்டத்தில் உள்ள சீலநாயக்கன்பட்டி அருகே உள்ள கே.வி.பி திடலில் தவெக நிர்வாகிகள் கூட்டம் நடைபெற்றது. அதில் ஏராளமான தொண்டர்கள் பங்கேற்றிருந்தனர். இந்தக் கூட்டத்தில் 1 மணியளவில் விஜய் பேசத் தொடங்கினார்.

அதேசமயம், கூட்டம் நடைபெற்ற இடத்தில் கடுமையான வெயிலின் தாக்கம்இருந்தது.இதையடுத்து, பலர் மயக்கமடைந்தனர்.அவர்களுக்கு அங்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.இந்நிலையில், மகாராஷ்டிராவை சேர்ந்தவெள்ளிபட்டறை தொழிலாளியான சூரஜ் (37) என்பவர் மயங்கி கீழே விழுந்துள்ளார். பிறகு அவர் மயங்கிய நிலையில், அவரை தனியார் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர்.

அப்போது, அவர் வழிலேயே உயிரிழந்தார் என கூறப்படுகிறது. மாரடைப்பு காரணமாக சூரஜ் உயிரிழந்ததாக தகவல் வெளியாகியுள்ளது. இச்சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இது குறித்து தவெக இணைப் பொதுச் செயலாளர் சி.டி.ஆர். நிர்மல்குமார் தனது எக்ஸ் தள பக்கத்தில் அளித்துள்ள விளக்கத்தில், தவெக சார்பில் சேலத்தில் நடைபெற்ற கூட்டத்தைக் காண வந்த சூரஜ் என்ற இளைஞர் திடீர் உடல்நலக்குறைவால் மயங்கி உள்ளார்.

அவருக்கு உடனடியாக முதலுதவி செய்யபட்டு கழக நிர்வாகிகள் சரியான நேரத்தில் மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர். ஆனால் மாரடைப்பால் சூரஜ் மரணமடைந்தது வேதனை அளிக்கிறது. இளைஞர் சூரஜின் இந்த எதிர்பாராத மரணத்துக்கு எங்களது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம்" என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மகளிர் உரிமைத் தொகை: வங்கிகளில் அலைமோதும் பெண்கள் கூட்டம்!



தமிழக அரசு அறிவித்த மகளிர் உரிமைத் தொகை ரூ. 5 ஆயிரம் எடுக்க வங்கிகளில் அலைமோதும் பெண்கள் கூட்டத்தால் வங்கிகள் திணறி வருகின்றனர்.

தமிழக அரசு பெண்களின் வாழ்வாதாரம் மற்றும் அவர்களின் முன்னேற்றத்திற்கான மகளிர் உரிமைத் தொகை திட்டத்தைக் கடந்தாண்டு செப்டம்பர் 15 ஆம் தேதி அண்ணா பிறந்த தினத்தில் அறிவித்துத் தொடர்ந்து தற்போது வரை அளிக்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில் இந்த மகளிர் உரிமைத்தொகை திட்டத்தை முடக்க பல்வேறு சதிகள் நடப்பதாகக் கூறி காலை 7 மணியளவில் திடீரென தமிழக முதல்வர் புதிய அறிவிப்பை வெளியிட்டார். அதில் மூன்று மாதக்கால உரிமைத்தொகை முன்கூட்டியும், கோடைக்கால தொகையாக ரூ. 2,000 என ஒவ்வொருவருக்கும் 5 ஆயிரம் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டதாக அறிவிப்பு வெளியானதால் மகளிர்கள் பெரும்மகிழ்ச்சி அடைந்தனர்.

இந்த நிலையில், இந்த மகளிர் உரிமைத்தொகை பணத்தை விரைந்து எடுக்காவிடில் திரும்பிவிடும் எனப் பொய் தகவல் அதிகளவில் கிராமப்புறங்களில் பரவியதால் கிராமப்புற வங்கிகளில் காலை 9 மணிக்கு முதலே பெண்கள் கூட்டம் அலைமோதி வருகிறது. தங்கள் வங்கிக் கணக்கு புத்தகம் மற்றும் ஏடிஎம் அட்டை உள்ளிட்டவைகளை எடுத்து வரிசையாக வங்கிகளிலும், சில வங்கிகளில் ஒருவரை ஒருவர் முந்திக்கொண்டும் பணத்தை எடுக்கக் காத்திருக்கின்றனர். மேலும், ஏடிஎம் மையங்களில் சிலர் தங்களது அட்டையைப் பயன்படுத்தத் தெரியாமல் பிறரை உதவிக்கு அழைக்கும் நிலையில், கடவுச்சொல் பாதுகாப்பின்மை கேள்விக்குறியாக உள்ளதை அறியாமல் உள்ளனர்.

# குற்றாலத்தில் நகர பா.ஜ.க. சார்பில் அருள்மிகு திருகுற்றாலம் சுவாமி திருக்கோவில் சப்பரங்கள் செல்வது சம்பந்தமாக மனு



குற்றாலத்தில் நகர பாரதிய ஜனதா கட்சி சார்பில் அருள்மிகு திரு குற்றாலம் சுவாமி திருக்கோவில் சப்பரங்கள் செல்வது சம்பந்தமாக மனு கொடுக்கப்பட்டுள்ளது மனுவில் கோரிக்கை கோவில் சப்பரங்கள் பல நூற்றாண்டு காலமாக வடக்கு சன்னதி பஜார் வழியாக சென்று வந்தது அப்பொழுதெல்லாம் வடக்கு சன்னதி பஜாரில் சுமார் 40அடி ரோடாக இருந்தது 2013க்கு பிறகு சில கடைக்காரர்களின் சுய லாபத்திற்காக அன்றைய காலகட்டத்தில் கோவில் அதிகாரிகளையும் கைக்குள் போட்டுக் கொண்டு பல லட்சங்கள் கைமாறுத்தி சப்புறங்கள் வடக்கு சன்னதி பஜார் வழியாக செல்ல முடியாத அளவுக்கு ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள் இதை கண்டித்து பலமுறை கோவில அதிகாரியிடம் முறையிட்டும் எவ்வித பயனும் இல்லை இதனால் 2013 ஆண்டுக்கு பிறகு அருள்மிகு திருக்குற்றாலத்தில் சில துயர சம்பவங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது சம்பவம் ஒன்று சித்திர சபையில் உள்ள தெப்பக்குளத்தில் சில துரு மரணங்கள் சம்பவம் இரண்டு கஜமுகன் என்று பக்தர்களால் அழைக்கப்படும் யானை போன்ற உயிரினங்கள் கோவில்வாசலில் அருவி வெள்ளத்தில் வந்து உயிர் நீத்த கொடூரம் சம்பவம் மூன்று குற்றாலம் நாதர் கோவிலுக்கு சொந்தமான சன்னதி பஜார் வடக்கு சன்னதி பஜார் மெயின் அருவி செல்லும் பாதையா சில கடைகள் மர்மமான முறையில் தீ பிடித்தது இதனால் வணிகர்களுக்கு பெரும் நஷ்டம் இதன் காரணமாக சுமார் 4 ஆண்டு எவ்வித வருமானம் ஈட்ட முடியாத அளவுக்கு ஏலத்தை தடை செய்துள்ளார்கள் இதற்கெல்லாம் எம்பெருமால் திரு குற்றாலம் சுவாமியே சாட்சி மீண்டும் அவர் பாதையில் சன்னதி பஜார் வழியாக அவர் செல்ல வேண்டும் குற்றாலத்தில் இனி ஒரு இதுபோன்ற துயர சம்பவம் நடைபெறாமல் இருக்க இதுவே வழி என்று பக்தர்கள் அனைவருமே வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறார்கள் இது சம்பந்தமாக இன்று காலை 13 2 2026 11 மணி அளவில் அருள்மிகு திருக்கோவில் அதிகாரியிடம் மனு கொடுக்கப்பட்டுள்ளது இந்த மனுவின் மீது 30 நாட்களுக்குள் நடவடிக்கை எடுக்க வேண்டும் இல்லையெனில் அனைத்து இந்து அமைப்புகளையும் ஒன்று சேர்த்து அனைத்து சிவபக்தர்கள் முருக பக்தர்கள் பராசக்தி பக்தர்கள் மற்றும் பாரதிய ஜனதா கட்சியின் மாநிலதலைவர் நைனார் நாகேந்திரன் அவர் தலைமையில் முன்னாள் மாநிலத் தலைவர் மரியாதைக்குரிய அண்ணாமலை ஐபிஎஸ் அவர் முன்னிலையில் சுமார் 50 ஆயிரம் பக்தர்களை திரட்டி மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம் இது சம்பந்தமாக இன்று காலை தென்காசி தெற்கு ஒன்றிய பாரதிய ஜனதா கட்சியின் ஒன்றிய தலைவர் இசக்கிமுத்து தலைமையில் குற்றால நகரத் தலைவர் திருமுருகன் ஆகிய நான் மனு கொடுத்துள்ளேன் இதில் சிறப்பு அழைப்பாளராக விஷ்வ ஹிந்து பரிஷத்தின் மாநில செயலாளர் மரியாதைக்குரிய சரவணா கார்த்திகேயன் ஜி கலந்து கொண்டார் மற்றும் மாவட்ட செயற்குழு உறுப்பினர் மேலகரம் ஈஸ்வரன் மாடசாமி என்றசெல்லத்துரை மற்றும் ஊடகப்பிரிவு செந்தூர்பாண்டியன் மாவட்ட பட்டியல அணி பொதுச் செயலாளர் பால்ராஜ் மற்றும் கிளைத் தலைவர்கள் செல்வராஜ் மணிகண்டன் மதன் முத்துப்பாண்டியன் நாகராஜ் வெங்கடேஷ் கண்ணன் ஜெயக்குமார் இன்னும் பல கட்சி பெரும்பாலும் கலந்து கொண்டனர்

# தமிழக முதல்வருக்கு நன்றி தெரிவித்து மதுராந்தகம் நகர மன்ற கூட்டத்தில் சிறப்பு தீர்மானம்

## நகரமன்ற உறுப்பினர்கள் இனிப்பு வழங்கி கொண்டாட்டம்



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் நகர மன்றத்தில் தமிழக மகளிர் உரிமை தொகை 5 ஆயிரம் வழங்கிய தமிழக முதலமைச்சருக்கு நன்றி தெரிவித்து நகராட்சி ஆணையர் அபர்ணா முன்னிலை யில் நகர மன்ற கூட்ட த்தில் சிறப்பு தீர்மானம் நிறைவேற்றி நகர மன்ற தலைவர் மலர்விழி குமார் தலைமையில் இனிப்புகள் வழங்கி கொண்டாடினர். மதுராந்தகம் நகராட்சி நகர மன்ற சிறப்பு கூட்டம் நகர மன்ற தலைவர் மலர்விழிகுமார் தமிழக முதல மைச்சருக்கு நன்றி தெரிவித்து சிறப்பு தீர்மானங்கள் நிறைவேற்றி நகர மன்ற கூட்டத்தில் பங்கு பெற்ற உறுப்பினர்களுக்கு இனிப்புகள் வழங்கி கொண்டாடினர்.

மேலும் இக்கூட்டத்தில் நகர மன்ற தலைவர் மலர்விழிகுமார் பேசுகையில் தமிழகம் முழுவதும் கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தின் கீழ் பயனாளிகள் பயன்பெறும் வகையில் பிப்ரவரி மார்ச் ஏப்ரல் மாதத்திற்கான முன்பணமாக 3000 மற்றும் கோடைகால சிறப்பு தொகையாக 2000 என 5000 கலைஞர் மகளிர் உரிமை திட்டம் பயனாளிகள் அனைவருக்கும் பணம் வரவு வைக்கப்பட்டது. இதற்காக மதுராந்தகம் நகர மன்ற கூட்டத்தில் சிறப்பு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டது.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.